தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.2 நாள் 30.10.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 8/2025 | | |
| பெயர் | கருணாகரன் | த/பெ. | ராஜன் |
| வயது | 66 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | திருவெண்காடு | தாலுக்கா | சீர்காழி |

**( எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது கீழவீதியில் திருவெண்காட்டில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. திருவெண்காடு போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன். எனக்கு எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அனுமதிகோரி இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

திருவெண்காட்டில் உள்ள எனது கடையில் இருந்தபோது அன்று காலை பானிப்பூரி வியாபாரம் செய்யும் நாகராஜ்ன் என்பவரின் பானிப்பூரி வண்டியை யாரோ உடைத்துவிட்டாகள் என்று கேள்விபட்டேன் என

CJM, MAYILADUTHURAI.

போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. அந்த வழக்கு சம்மந்தமாக கடந்த 01.08.2018 அன்று 1.30 மணியளவில் நானும், கலியபெருமாள் என்பவரும் எனது கடையிலிருந்தபோது திருவெண்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் அன்றே மதியம் 2.30 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்து உடைக்கப்பட்ட பானிப்பூரி தள்ளுவண்டியின் கண்ணாடி துண்டுகள் இரண்டினை கைப்பற்றினார் என்றால் சரியல்ல. நானும், கலியபெருமாளும் அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. நான் தற்போது உண்மையை மறைத்து எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.